செய்தி வெளியீடு எண்– 646 நாள்–12.8.2008

**பேரூராட்சிகளில் இரண்டாம்நிலை செயல் அலுவலர் பதவிக்கான பணி நியமன ஆணை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களால் வழங்கப்பட்டது**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 12.8.2008 அன்று பேரூராட்சிகள் துறைக்கு புதியதாக நேரடி நியமனம் செய்யப்பட்ட 19 இரண்டாம் நிலை பேரூராட்சி செயல் அலுவலர்களுக்கு பணி நியமன உத்திரவினை வழங்கினார்.

பேரூராட்சிகளில் இரண்டாம்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் பணியிடம் நேரடி நியமனம் மற்றும் கீழ்நிலை பணியாளர்களிலிருந்து பதவி உயர்வு ஆகியவற்றின் மூலம் நிரப்பப்படுகிறது. அதன்படி தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் நேரடி நியமனம் மூலம் இரண்டாம் நிலை பேரூராட்சி செயல் அலுவலர் பணியிடம் பூர்த்தி செய்யப்பட பேரூராட்சிகள் ஆணையரகத்தால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் 17.11.2007ம் தேதியில் எழுத்துத் தேர்வு மற்றும் 17.3.2008 முதல் 15.4.2008 வரை நேரடி தேர்வு நடத்தி 19 இரண்டாம்நிலை பேரூராட்சி செயல் அலுவலர்களை பேரூராட்சிகள் துறைக்கு ஒதுக்கீடு செய்தது. மேற்படி ஒதுக்கீடு செய்யப்பட்ட நபர்களுக்கான பணி நியமன ஆணையினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தலைமைச் செயலகத்தில் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் திரு.கே. தீனபந்து, இ.ஆ.ப., அரசு முதன்மை செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, டாக்டர் கே.கோபால், இ.ஆ.ப., பேரூராட்சிகளின் ஆணையர் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இந்த நேரடி நியமனம் 1993–94ம் ஆண்டிற்கான நியமனத்திற்கு பிறகு பல ஆண்டுகள் கழித்து தற்போது நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

மாநிலத்தில் 561 பேரூராட்சிகள் இருக்கின்றன. அதில் பல்வேறு வகையான பணியிடங்களில் பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர். இந்த அரசு பொறுப்பேற்ற

பிறகு மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் தொகுப்பூதிய பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்யப்படும் என அறிவித்தார். அதன்படி 2923 தொகுப்பூதிய பணியாளர்கள் ஊதிய ஏற்ற முறையில் கொண்டுவரப்பட்டு ஆணைகள் வெளியிடப்பட்டது. மேலும், பணியாளர்களின் நலன் மற்றும் மறைந்த பணியாளர்களின் குடும்பத்தாரின் நலத்தினை கருத்தில் கொண்டு பேரூராட்சிகள் துறையில் பணியிடை காலமான 430 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்து உத்திரவிட்டுள்ளது. அதே போன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி பணி நியமனத்திற்கு விதிக்கப்பட்டிருந்த தடையினை நீக்கம் செய்து ஆணை வெளியிடப்பட்டதன் அடிப்படையில் இதுவரை பல்வேறு வகையிலான 1504 பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. மேலும், பெரும்பான்மையாக, காலியாக இருந்த செயல் அலுவலர்கள் பணியிடங்களில் பதவி உயர்வு மற்றும் தற்காலிக வேலை நிமித்தம் அடிப்படையில் 400க்கும் மேற்பட்ட நபர்களை பணியமர்த்தி ஆணை வழங்கப்பட்டது. இதே வகையில் பேரூராட்சிகளின் வளர்ச்சிப் பணிகளை மேம்படுத்த பொறியியல் பிரிவினை பலப்படுத்தும் விதமாக உதவி செயற் பொறியாளர்–5, உதவி/இளநிலை பொறியாளர்–35, வரைவாளர்–23, பணி ஆய்வாளர்–250 ஆக மொத்தம் 313 பணியிடங்களை உருவாக்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

தற்போது நியமன ஆணை பெற்ற செயல் அலுவலர்கள் கோயம்புத்தூர், கடலூர், திண்டுக்கல், ஈரோடு, கன்னியாகுமரி, கரூர், கிருஷ்ணகிரி, நாமக்கல், பெரம்பலூர், இராமநாதபுரம், சேலம், சிவகங்கை, தஞ்சாவூர், திருநெல்வேலி, திருவண்ணாமலை, தேனி, தூத்துக்குடி, விழுப்புரம் மற்றும் விருதுநகர் மாவட்ட அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

* * * * * * * * * * *

வெளியீடு– இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.